மார்ச் 31

மனன வசனம்

**அப்பொழுது வலுசர்ப்பமானது ஸ்திரீயின்மேல் கோபங்கொண்டு, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிற வர்களும், இயேகிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம் பண்ணப் போயிற்று. வெளி 12:17.**

ஆராய்ச்சிக்கு

*எசேக் 28:1,2; எசேக் 28: 11-17; ஆதி 3:1-7; வெளி 12:1-17; ரோமர் 8:31-39; வெளி 14:12.*

மார்ச் 31 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

பாடம் 1

# அனைத்துலகப் போராட்டம்



'மாபெரும் போராட்டம்' என்று நாம் அழைக்கிற அனைத்துலகப் போராட்டத்தை அடிப்படையாக வைத்துதான் வேதாகமம் இவ்வுலக நிகழ்ச்சிகளை விளக்குகிறது. இதே பின்னணியில்தான் இப்பிரபஞ்ச நிகழ்வுகள் அனைத்தும் அரங்கேறிவருகின்றன. பாவம், உபத்திரவம், மரணம், தேசங்களின் எழுச்சி - வீழ்ச்சி, நற்செய்தி சொல்லுதல், கடைசிக்கால நிகழ்வுகள் போன்ற இவை யாவும் அனைத்துலகப் போராட்டத்தின் அடிப்படையிலதான் நிகழ்கின்றன.

இப்போராட்டம் நடைபெற்ற முக்கிய இடங்கள் சிலவற்றை இவ்வாரம் பார்ப்போம். பரிபூரணனாகச் சிருஷ்டிக்கப்பட்டிருந்த லூசிபர் என்கிற ஒரு நபரின் மனதில் இந்தப் போராட்டம் முதலில் துவங்கியது; அதற்குக் காரணம் தெரியவில்லை. பூமியில் பூரண நிலையில் சிருஷ்டிக்கப்பட்ட ஆதாம்-ஏவாள் என்பவர்களுக்குள் அவன் தன் கலகத்தைப் புகுத்தி, லூசிபர் அவர்களையும் விழச்செய்தான். லூசிபரின் விழுகை, நம் முதல் பெற்றோரின் விழுகை ஆகிய இரண்டும்தான் இந்தப் போராட்டத்திற்கு அச்சாணிகள். போராட்டம் வேர்விட்டு, அசுரவேகத்தில் வளர்ந்துவருகிறது. இந்த அனைத்துலக நிகழ்வில் நாம் அனைவருமே அங்கம்வகிக்கிறோம்.

'ஒருநாளில் இது முடியப்போகிறது; அன்று சாத்தானை கிறிஸ்து முற்றிலும் வென்றிருப்பார்' என்பது நல்ல செய்தி. 'சிலுவையில் இயேசு நமக்காக எல்லாவற்றையும் நிறைவேற்றிவிட்டதால், அந்த வெற்றியில் நாமும் பங்குபெறலாம்'' என்பது மிகமிக நல்ல செய்தி. இயேசு நிச்சயம் வருவார். அந்த வெற்றியின் ஒரு பகுதியாக, இயேசுவில் தேவன் தரப்போகிற அனைத்தையும் நாம் பெற்றுக்கொள்ளலாம். அதற்கு விசுவாசத்தோடும் கீழ்ப்படிதலோடும் வாழ, தேவன் அழைக்கிறார்.

2018, ஏப்ரல் 7 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

ஞாயிறு, ஏப்ரல் 1

## பரிபூரணண் ஒருவனின் விழுகை

வேதாகம உலகப் பார்வைக்கு, அனைத்துலகப் போராட்டம்தான் பின் புலம். இதன் அடிப்படையில், பல கேள்விகள் எழும்புகின்றன. அவற்றில் முக்கியமான கேள்வி: ‘இது எப்படி நிகழ்ந்தது?’ என்பதே. அண்டசராசரத்தையும் சிருஷ்டித்தவர் அன்புள்ளவர்; எனவே, துவக்கத்திலிருந்தே அந்தச் சிருஷ்டிப்பில் தீமையும் வன்முறையும் முரண்பாடும் அடங்கியிருக்க நிச்சயம் வாய்ப்பே இல்லை; ஆதி சிருஷ்டிப்போடு சம்பந்தமற்ற ஒன்றிலிருந்துதான் இந்தப் போராட்டம் தோன்றியிருக்கவேண்டும்; இது நிச்சயமாக இந்தச் சிருஷ்டிப்பின் விளைவாக வந்ததல்ல. ஆனாலும், இங்குப் போராட்டம் நடக்கிறது; இது உண்மை; நாமெல்லாரும் அதில் சம்பந்தப்பட்டுள்ளோம்.

**லூசிபரின் விழுகைபற்றியும், தீமை உருவானதுபற்றியும் வேதாகமம் சொல்வது என்ன? எசேக்கியேல் 28:1,2, 11-17; ஏசா 14:12-14.**

---

---

பரலோகத்தில் வாழ்ந்த லூசிபர் முதலில் ஒரு பரிபூரணனாக இருந்தான். அப்படியொரு சூழ்நிலையில் அவனுக்குள் எவ்வாறு அக்கிரமம் எழுந்தது? நமக்குத் தெரியவில்லை. இதனை **‘அக்கிரமத்தின் இரகசியம்’** என்று வேதாகமம் குறிப்பிடுவதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். 2தெச 2:7.

தாம் சிருஷ்டித்த அறிவு ஜீவிகளுக்கு தெரிந்தெடுக்கும் உரிமையை தேவன் கொடுத்தார்; லூசிபரின் விழுகைக்கு இந்த ஒன்றைத்தவிர வேறு எந்தக் காரணத்தையும் சொல்லமுடியாது. இதுபற்றி எலன் ஒய்ட் விபரமாகக் கூறுகிறார்: ‘பாவம் ஏன் இருக்கிறது என்று காரணம்சொல்லி, பாவத்தின் தோற்றத்தை விளக்குவது கடினம். பாவம் இடையில் புகுந்துவிட்டது; அது இருப்பதற்கு எவ்விதக் காரணமும் சொல்லமுடியாது. அது ஒரு புதிர். அதற்கு விளக்கம் சொல்வது என்பது, அதை நியாயப்படுத்துவது ஆகும். நாம் அதற்கு விளக்கம்சொல்ல முடியுமானால், அது இருப்பதற்குக் காரணங்காட்ட முடியுமானால், அது பாவமாக இருக்காது.’ - *GC, p 492,493.*

**பாவம்** என்பதற்குப் பதிலாக, **தீமை** என்று போட்டு வாசித்தாலும் அர்த்தம் அதுதான். தீமை ஏன் இருக்கிறது என்று காரணம்சொல்லி, தீமையின் துவக்கத்தை விளக்குவது கடினம். தீமை இடையில் புகுந்துவிட்டது; அது இருப்பதற்கு எவ்விதக் காரணமும் சொல்லமுடியாது. அது ஒரு புதிர். அதற்கு விளக்கம்சொல்வது என்பது, அதை நியாயப்படுத்துவது ஆகும். நாம் அதற்கு விளக்கம்சொல்ல முடியுமானால், அது இருப்பதற்குக் காரணங்காட்டமுடியுமானால், அது தீமையாக இருக்காது.

தெரிந்துகொள்ளும் உரிமை நிஜமான ஒன்று. இதை உங்களுடைய வாழ்க்கையில் எவ்வளவு தூரம் உணர்ந்திருக்கிறீர்கள்? தெரிந்துகொள்ளும் உரிமையைப் பயன்படுத்திச் செய்கிற தீர்மானங்களை, ஏன் ஜெபத்தோடும் கவனத்தோடும் செய்யவேண்டும்?

## தகவல்மட்டும் போதாது

தீமை ஏன் வந்தது என்பதற்கு நாம் விளக்கம் சொல்லமுடியாது; ஏனெனில், அதை நியாயப்படுத்துவதற்கு எதுவும் இல்லை. ஆனால், பரலோகத்தில் லூசிபரின் இருதயத்தில் அது தோன்றியதாக வேதாகமம் சொல்கிறது. எலன் ஒய்ட் ஆச்சரியமான சில விபரங்களைத் தருகிறார். 'மாபெரும் போராட்டம்' புத்தகத்தில் 'தீமையின் தோற்றம்' என்கிற அதிகாரத்தில் அதைப்பற்றி வாசிக்கலாம். மற்றபடி, பரலோகத்தில் இது எவ்வாறு ஆரம்பித்தது என்று வேதாகமம் அதிகமாக எதுவும் சொல்லவில்லை. ஆனால், பூமியில் இது எவ்வாறு ஆரம்பித்தது என்று மிகத் தெளிவாகக் கூறுகிறது.

**ஆதாம்–ஏவாள் குற்றவாளிகளாகும்படி நடந்தது என்ன? ஆதி 3:1–7.**

---

தேவன் என்ன சொல்லியிருந்தார் என்பதை ஏவாள் நன்றாக அறிந்திருந்தாள். '*தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து தேவன், நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார்*' என்று அவளே சொல்கிறாள். ஆதி 3:3. அந்த மரத்தைத் தொடவேண்டாம் என்று தேவன் சொன்னதாக வேதாகமம் சொல்லவில்லை. ஆனால், கனியைப் புசித்தால் மரணம் நிச்சயம் என்பது அவளுக்குத் தெரியும்.

வெளிப்படையாக அந்த வார்த்தைகளை சாத்தான் புரட்டுகிறான். '*சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவேசாவதில்லை*' என்றது. ஆதியாகமம் 3:4.

உண்மையை அப்படியே புரட்டிவிட்டான். முதலில் அவன் எவ்வளவு நய வஞ்சகமாகப் பேசினானோ தெரியாது; ஆனால், தான் சொன்னதிற்கு தடைசொல்லாமல் அவள் கேட்க ஆரம்பித்ததுமே, தேவன் சொன்னதை வெளிப்படையாகவே மறுத்துப்பேசுகிறான். ஏவாள் அறியாமையிலா இருந்தாள்? 'எனக்குத் தெரியவே தெரியாது' என்று அவள் சொல்லவே முடியாது.

**அவளுக்குத் தெரிந்திருந்தது.**

ஏவாள் எல்லாவற்றையும் அறிந்திருந்தபோதிலும் தவறுசெய்தாள். ஏதேனின் பரிபூரண சூழ்நிலையிலும்கூட பாவம்செய்யாமல் ஏவாளைத் தடுப்பதற்கு, தகவல்கள் ஏதும் செய்யமுடியவில்லை. ஆதாம் நிலைமையும் அப்படித்தான்; அவனுக்கும் உண்மை தெரியும். எனவே, இப்போது நாம் இரட்சிக்கப்படுவதற்கு தகவல் தெரிந்திருப்பதுமட்டுமே போதுமென்று நம்மைநாமே முட்டாள்களாக்கிவிடக்கூடாது. ஆம், தேவனுடைய வார்த்தை சொல்வதை அறிந்திருப்பது முக்கியம்தான். அத்தோடுசேர்ந்து, வேதாகமம் சொல்கிறபடி கீழ்ப்படிவதற்குத் தேவையான அர்ப்பணிப்பும் நம்மில் இருக்கவேண்டும்.

---

தேவன் ஒன்றைச் சொல்ல, சாத்தான் இன்னொன்றைச் சொல்லுகிறான். ஆதாம்–ஏவாள் சரியானதை அறிந்திருந்தபோதிலும் சாத்தானுக்குச் செவிகொடுக்கத் தீர்மானித்தார்கள். பல ஆயிரம் வருடங்கள் கடந்துவிட்டன; இந்த நிலையில் ஏதாவது மாற்றம் உண்டாகியிருக்கிறதா? இதே தவற்றை நாமும் செய்யாதிருக்க, நாம் என்ன செய்யலாம்?

**செவ்வாய், ஏப்ரல் 3**

## பரலோகத்திலும் பூலோகத்திலும் யுத்தம்

நம் முதல் பெற்றோர் செய்த பாவமானது இவ்வுலகத்தைப் பாவம், தீமை, மரணம் ஆகியவற்றுக்குள் மூழ்க்கிவிட்டது. உடனடிக் காரணம், யார்பேரில் தவறு என்பவற்றில் கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆனால் குழப்பம், வன்முறை, கிளர்ச்சி, சண்டை போன்றவற்றால் இன்று நாம் பாதிக்கப்படுகிறோம் என்கிற உண்மையை யாராவது மறுக்கமுடியுமா?

அனைத்துலகப் போராட்டம்பற்றிப் பேசுகிறோம்; அது உண்மைதான். இந்தப் போராட்டம் எங்கேயோ தோன்றினாலும், இன்று அது இந்தப் பூமியில் நடைபெற்றுவருகிறது. ஏதேனில் நிகழ்ந்த விழுகைமுதல் இயேசுவின் இரண்டாம்வருகைக்குமுன்னானகடைசிக்காலநிகழ்வுகள்வரைஎடுத்துக்கொண்டால், வேதாகமம் சொல்கிற ஒவ்வொரு வரலாறும் இந்த மாபெரும் போராட்டத்தை விளக்குவதாகத்தான் உள்ளது. இந்தப் போராட்டத்தின்மத்தியில் நாம் வாழ்ந்து வருகிறோம். என்ன நடக்கிறது? அதன் பின்னணி என்ன? அது எவ்வாறு முடியப்போகிறது? இவற்றை தேவவார்த்தை நமக்கு விளக்குகிறது.

**வானத்திலும் பூமியிலும் என்ன யுத்தம் நிகழ்வதாக வெளி 12:1–17 கூறுகிறது?**

---

---

சாத்தானாகிய வலுசர்ப்பத்திற்கும் மிகாவேலுக்கும் இடையே முதல் யுத்தம் நடந்தது. வெளி 12:7-9. எபிரெய மொழியில் மிகாவேல் என்றால், 'தேவனுக்கு ஒப்பானவர் யார்?' என்று அர்த்தம். கலகக்காரனாகிய லூசிபர்தான் சாத்தான் (சத்துரு); சிருஷ்டிகரின் கரத்திலிருந்து வந்த அவன் நித்திய சிருஷ்டிகராகிய இயேசுவுக்கு எதிராகச் சண்டையிடுகிறான். எபி 1:1,2: யோவான் 1:1-4.

லூசிபர் தன் சிருஷ்டிகருக்கு எதிராகக் கலகம் செய்தான். இரண்டு தெய்வங்களுக்கு இடையே நடைபெறுகிற போராட்டம் அல்ல இது. ஒரு சிருஷ்டி தன் சிருஷ்டிகருக்கு எதிராகக் கலகம்செய்கிறான்; அதே கலகத்தை, பிற சிருஷ்டிகளுக்குள்ளும் புகுத்துகிறான்.

பரலோகத்தில் கிறிஸ்துவோடு யுத்தம்செய்து தோற்ற சாத்தான், இயேசு இப்பூமியில் பிறந்தபோது மீண்டும் அவரோடு யுத்தத்தில் ஈடுபட்டான். வெளி 12:4. இங்கும் கிறிஸ்துவிடம் தோற்றான்; வனாந்தரத்திலும் தோற்றான்; பிறகு, சிலுவையிலும் தோற்றான்; சிலுவைத் தோல்வி அவனுக்கு மரண அடியாக இருந்தது. எனவே, கிறிஸ்துவின் பிள்ளைகளோடு போராடக்கிளம்பிவிட்டான். கிறிஸ்தவ வரலாறு முழுவதிலும் இந்த யுத்தம் தீவிரமாக நடைபெற்று வந்திருக்கிறது. வெளி 12:6, 14-16. இறுதிவரைக்கும் இந்த யுத்தம் தொடரும். வெளி 12:17. இறுதியில் சாத்தானுக்குத் தோல்விதான்; இயேசுவின் இரண்டாம் வருகையோடு அவன் கதை முடிந்துவிடும்.

யுத்தங்களையும் போராட்டங்களையும்பற்றி வெளிப்படுத்தலின் பல வசனங்கள் பேசினாலும், வெளி **12:10–12** எப்படிப்பட்ட நம்பிக்கையை நமக்குத் தருகிறது?

## முடிவுபரியந்தம் உங்களுடனே கூட இருக்கிறேன்

'பவுல் இரத்தச்சாட்சியாக மரித்த காலத்தில் நீரோ அரசன் ஆரம்பித்துவைத்த உபத்திரவமானது சில சமயங்களில் தீவிர உக்கிரத்தோடும், சில சமயங்களில் மிதமான உக்கிரத்தோடும் பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்தது. மிகக்கொடிய குற்றங்களை கிறிஸ்தவர்கள் செய்ததாகப் பொய்யாகக் குற்றஞ்சாட்டினார்கள். பஞ்சம், கொள்ளைநோய், பூகம்பம் போன்ற பேரழிவுகளுக்கு கிறிஸ்தவர்கள் தாம் காரணம் என்றார்கள். அனைவரின் வெறுப்புக்கும் சந்தேகத்திற்கும் கிறிஸ் தவர்கள் ஆளானதால், ஆதாயம்பெறுவதற்காக அப்பாவிகளையும் மாட்டிவிட காட்டிக்கொடுப்போர் காத்திருந்தார்கள். பேரரசுக்கு எதிராகக் கலகம்செய்பவர் கள், மதவிரோதிகள், சமுதாயத்தின் விஷப்பூச்சிகள் என்று அவர்களைக் குற்றஞ் சாட்டினார்கள். ஏராளமானோர் மிருகங்களுக்கு இரையாக்கப்பட்டார்கள்; பலர் விளையாட்டு அரங்குகளில் உயிரோடு எரிக்கப்பட்டார்கள்.' - *GC, p 88.*

சபை வரலாற்றில் கணிசமான ஒரு காலம் தேவபிள்ளைகளுக்கு உபத்திர வம் உண்டாகும் என்று வெளி 12:14 முன்னுரைக்கிறது. சபையானது உபத்திர வப்பட்ட 1260 வருடங்களை இந்த 1260 நாட்கள் சுட்டிக்காட்டுகின்றன. அந்தச் சமயத்தில் ஸ்திரீயானவள் (சபை) வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள். வெளி 12:6. கழுகுகளைப்போல இரண்டு சிறகுகள் அவளுக்கு இருந்ததாக இருமுறை சொல்கிறது. உதவிகிடைத்த ஓர் இடத்திற்கு சபை தப்பியோடியதை இது சுட்டிக் காட்டுகிறது. வனாந்தரத்தில் அவளுக்குப் பாதுகாப்பு கிடைத்தது; சர்ப்பத்தால் அவளை ஒன்றும் செய்யமுடியவில்லை. வெளி 12:14. பெரிய உபத்திரவங்கள் மத்தியிலும் தேவன் தமக்கென்று சிலரை மீதமாகப் பத்திரப்படுத்தி வந்திருக் கிறார். கடைசிநாட்களில் தம் மக்களுக்கு நேரிடக்கூடிய ஆபத்துகளை மனதில் வைத்தே, '*உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே இருக்கிறேன்*' என்று கிறிஸ்து சொன்னார். மத் 28:20.

**இயேசுவைப் பின்பற்றின அநேகர் இரத்தச் சாட்சிகளாக மரித்தபோதிலும், இந்த வாக்குறுதி எவ்வாறு நமக்கு உதவியாக இருக்கமுடியும்? ரோமர் 8:31–39; மத்தேயு 10:28.**

உபத்திரவமோ பஞ்சமோ மரணமோ தேவனுடைய அன்பைவிட்டு நம் மைப் பிரிக்கமுடியாது. கிறிஸ்துவின் பிரசன்னம் நம்மோடு இருப்பதால் வேதனை, உபத்திரவம், பாடுகள், மரணம் போன்றவற்றிலிருந்து நாம் தப்பமுடி யாது. அப்படியொரு விதிவிலக்கை தேவன் நமக்குத் தரவில்லை. இயேசுவை யும் அவர் நமக்காக செய்தவற்றையும் மனதில் வைத்திருந்தால், இந்த உபத்திர வங்கள்மத்தியிலும் நம்மோடு இருப்பதாக அவர் சொன்னதை நம்பி வாழு வோம்; புதிய பூமியில் நமக்கு நித்திய வாழ்வைத் தருவார் என்கிற வாக்குறுதியை நம்புவோம். இந்த உலகத்தில் நமக்கு என்ன நேரிட்டாலும், '*இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாதிபதியாகிய கர்த்தர் அந் நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்ன மாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்*' என்று உறுதியுடன் கூறலாம். 2தீமோ 4:8. 'அவர் பிரசன்னமாகுதலை விரும்புகிறவர்' இந்த நம்பிக்கையையும் வாக்குறுதியையும் தமக்குச் சொந்தமாக்கிக்கொள்ளலாம்.

**வியாழன், ஏப்ரல் 5**

## நியாயப்பிரமாணமும் நற்செய்தியும்

நம் அடையாளம் என்ன என்பதை செவந்த்-டே அட்வென்ட்டிஸ்ட் என்கிற பெயரே அதிகம் காட்டிவிடும். செவந்த்-டே என்பது ஏழாம்நாளான ஓய்வு நாளைச் சுட்டிக்காட்டுகிறது. அதாவது, அந்த ஒரு கற்பனையை மட்டுமல்ல, அதன்மூலம் மற்ற எல்லா கற்பனைகளையும் நாம் நம்புகிறோம் என்பதைக் காட்டுகிறது. அட்வென்ட் டிஸ்ட் என்பது இயேசுவின் இரண்டாம் வருகையை நாம் நம்புவதைக் காட்டுகிறது. இயேசு முதலாம்முறை வந்து, நம் பாவத்திற்கு பலியாக மரித்தார் என்று நம்பினால் மட்டுமே அவருடைய இரண்டாம் வருகை அர்த்தமுடையதாக இருக்கும். எனவே, செவந்த்-டே அட்வென்ட்டிஸ்ட் என் கிற பெயரானது தற்கால சத்தியத்தின் இணைபிரியாத இரு அங்கங்களைச் சுட்டிக்காட்டுகிறது. 1. கற்பனை, 2. சுவிசேஷம்.

**கற்பனையும் சுவிசேஷமும் எவ்வளவுக்கு நெருங்கிய தொடர்புடையவை என்று பின்வரும் வசனங்கள் சொல்கின்றன?**

*எரே 44:23*____________________

*ரோமர் 3:20-26*____________________

*ரோமர் 7:7*____________________

சுவிசேஷம் என்றால் நற்செய்தி. தேவனுடைய கற்பனையை மீறி நாம் பாவம் செய்துவிட்டாலும், இயேசு நம் பாவத்திற்காக சிலுவையில் மரித்தார் என்று விசுவாசித்தால் நம் செய்த பாவத்திற்கும், கற்பனையை நாம் மீறியதற்கும் நாம் மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளாம். இதுதான் நற்செய்தி. மேலும், கற்பனைக்கு முற்றிலுமாகக் கீழ்ப்படிவதற்கான வல்லமையும் நமக்குக் கொடுக் கப்பட்டுள்ளது.

அதனால்தான், கடைசி நாட்களில் மாபெரும்போராட்டம் மிக உக்கிரத் தோடு நடைபெற்றாலும்கூட அதில் தேவ பிள்ளைகள் விசேஷித்த விதத்தில் நடந்துகொள்வார்களெனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

**நியாயப்பிரமாணத்திற்கும் நற்செய்திக்கும் இடையேயுள்ள தொடர்பை வெளி 14:12 எவ்வாறு வெளிப்படுத்துகிறது?**

____________________

____________________

____________________

தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியவேண்டும் என்பதில் உறுதியாக இருப்பவர்கள் செவந்த்–டே அட்வென்ட்டிஸ்டுகள்; கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவது கிரியைத்துவம் இல்லை என்பதையும், அவர் நம்மை இரட்சித்திருப்பதால் அவர்மேல் உண்டாகும் அன்பின் விளைவால் அந்தக் கீழ்ப்படிதல் வருகிறது என்பதையும் எவ்வாறு மற்றவர்களுக்குக் காட்டலாம்? உபா 11:1; 1யோவான் 5:3 ஆகிய வசனங்கள் இந்தக் கருத்தை எவ்வாறு வலியுறுத்துகின்றன?

## மேலும் படிக்க:

'சிருஷ்டிகள் அன்பினால் மெய்ப்பற்று வைத்திருந்த வரையிலும் தேவனுடைய சர்வலோகம் முழுவதிலும் பூரண இசைவு காணப்பட்டது. தங்கள் சிருஷ்டிகரின் நோக்கத்தை நிறைவேற்றுவதே பரம சேனைகளின் மகிழ்ச்சியாக இருந்தது. அவருடைய மகிமையைப் பிரதிபலித்து, அவருடைய துதியைப் பறைசாற்றுவதில் அவர்கள் களிகூர்ந்தார்கள். தேவன்மேல் வைத்திருந்த அன்பு பெரியதாக இருந்தது; அதேசமயம் சுயநலமும் சந்தேகமும் இல்லாத அன்பை ஒருவர்மேலொருவர் வைத்திருந்தார்கள். விண்ணுலக இசைவைக் கெடுக்கும் அபசுரம் எதுவும் அங்கு இல்லை. ஆனால் இந்தச் சந்தோஷமான நிலையில் ஒரு மாற்றம் வந்தது. தேவன் தம் சிருஷ்டிகளுக்கு அருளியிருந்த சுயாதீனத்தை ஒருவன் தவறாகப் பயன்படுத்தினான். கிறிஸ்துவுக்கு அடுத்ததாக தேவனிடம் மிகுந்த கனத்தைப் பெற்றிருந்த அவனுக்குள் பாவம் தோன்றியது'– *EGW, 5T, p 133.*

'அன்பினால் மெய்ப்பற்று' என்று எலன் ஒய்ட் எழுதுகிறார். அன்புதான் மெய்ப்பற்றுக்கும் நம்பகத்தன்மைக்கும் வழிநடத்துகிறது. தன் கணவன் அல்லது மனைவியை நேசிக்கும் ஒருவர் அவருக்கு உண்மையாக இருப்பதில்தான் தன் அன்பை வெளிப்படுத்துகிறார். அப்படித்தான் பரலோக ஜீவிகளும் இருக்கிறார்கள். தேவனோடுள்ள நம் உறவும் அப்படிதான் இருக்கவேண்டும்..

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *சாத்தான் இருப்பதையும், மாபெரும் போராட்டத்தில் அவன் ஈடுபட்டிருப்பதையும் சுட்டிக்காட்டுகிற வேதாகம வசனங்களைக் காட்டுங்கள். சாத்தான் என்பது இருதயத்தில் உள்ள தீமையைச் சுட்டிக்காட்டும் ஒரு சொல் அல்ல; அவன் ஒரு நபர் என்பதை மக்கள் புரிந்துகொள்ள நாம் எவ்வாறு உதவலாம்?*

2. *செவந்த்-டே அட்வென்ட்டிஸ்டுகள் அளவுக்கு வேதாகமக் கொள்கைகளை அறிந்தவர்கள் வேறு எவருமே இருக்கமுடியாது. அருமைதான். ஆனால், இந்த அறிவு மட்டும் நமக்கு ஏன் போதாது? வெறும் தகவல்களை அறிந்திருப்பதைவிட இன்னும் அதிகமாக நமக்குத் தேவைப்படுவது என்ன?*

3. *இவ்வுலக வாழ்வில் இயேசுவின் பிரசன்னத்தை எவ்விதங்களில் அனுபவித்திருக்கிறீர்கள்? உங்களுடைய வாழ்க்கையில் எப்படிப்பட்ட கஷ்டம் வந்தாலும் இந்த அனுபவம் எவ்வாறு உதவக்கூடும்?*

4. *அன்பினால் மெய்ப்பற்று என்பதுபற்றி வகுப்பில் விவாதியுங்கள். கற்பனைக்கும் கிருபைக்கும் விசுவாசத்திற்கும் கீழ்ப்படிதலுக்கும் இடையேயுள்ள தொடர்பை சிறப்பாக அறிந்துகொள்வதற்கு இந்தக் கருத்து எவ்வாறு உதவக்கூடும்? அன்பு என்றாலே, அதில் சுதந்தரமும் சேர்ந்துதான் காணப்படுகிறது என்பதை இது எவ்வாறு உணர்த்துகிறது? இப்போதும்கூட, என்னென்ன வழிகளில் அன்பினால் நாம் தேவன்மேல் மெய்ப்பற்று வைக்கலாம்?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்

## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

1. YOUTUBE க்குப் போய், **Hope TV India**

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள்.

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

2. YOUTUBE க்குப் போய், **Tamil Sabbath School**

என்று டைப் பண்ணினால்,

ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களின் மொழிபெயர்ப்பாளர் நடத்தும் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*